# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 30 ஹிஜ்ரி 1438 ஷவ்வால் ஜூன் 2017

இலவசம்


# யூசுப் இஷாக் பள்ளிவாசல்



## அனைவருக்கும் இனிய நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துக்கள்

முஃப்தி நற்செய்தி

# ரமலான் அல் முபாரக்



உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் புனித மாதம் ரமலான், அல்ஹம்துலில்லாஹ் நமக்கு நல்ஆரோக்கியத்தை நல்கட்டும். ரமலான் மாதத்தை நாம் மறுபடியும் வரவேற்கத் துணைபுரிந்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்.

ரஹ்மா (இறையருளும் கருணையும்) என்பது பெரிதும் போற்றப்படும் நற்பண்பாகும். குறிப்பாக, சிங்கப்பூர் போன்ற பல இன நாட்டில் அமைதி, நல்லிணக்கம், செழிப்பு, புடைசூழ ஒற்றுமையாக வாழக்கூடிய சமூகத்தை நிர்மாணிப்பதற்கு இது அவசியம்.

இவ்வாண்டு ரமலான் மாதத்தின் கருப்பொருள் "ரஹ்மா(இறையருள்) சமூகம்". இதற்கேற்ப ரஹ்மா எனும் பண்பை ஒன்றாகக் கடைப் பிடிப்போம்.

உன்னதமான இறையருள் பெற்ற முஸ்லிம் சமூகத்தின் அடிக்கல், குடும்பமே ஆகும். இறைதூதர்(ஸல்) அவர்களைப் பின்பற்றி, இறைவனின் படைப்புகள் அனைத் திற்கும், இறையருளும் கருணையும் காட்டுமாறு, நமது குடும்ப உறுப்பினர்களுக்கு ஊக்கமளிக்க ரமலான் மாதம் வழங்கும் நல்வாய்ப்பைத் தவறாமல் பயன்படுத்திக் கொள்வோம்.

இன, சமய பாகுபாடின்றி நமது அண்டைவீட்டார்களுக்கு உதவிக்கரம் நீட்டு வோம். தேவையுள்ளோரின் சுமையைக் குறைக்க நாமே முன்சென்று உதவியளித் திடுவோம்.

இந்த ரமலான் மாதத்தில் பள்ளிவாச ல்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கெ டுத்து தொழுகையை யும் மற்ற வழிபாடு களையும் பெருக்கிடு வோம். குடும்பமாகச் சேர்ந்து, சுன்னத்தான தொழுகையை வழிப ட்டு நமது பிணைப் பை வலுப்படுத்துவோம்.

ரமலான் மாதத்தில் அனைவரின் நலனுக்காக நம் மனதில் அன்பையும், சுற்றுப்புற விழிப்புணர்வையும் வளர்க்கத் தொடங்குவோம். நமது இயல்பையும் சுபாவத்தையும் மாற்றிக் கொண்டு நமது குடும்பத்திற்கு மட்டுமின்றி சமூகத்திற்கும் ஆகச் சிறந்த முஸ்லிமாகத் திகழ ரஹ்மா-இறையருள் நமக்கெல்லாம் காரணகர்த் தாவாக விளங்கட்டும்.

முந்திய ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் இந்த ரமலான் மாதம் நம்மை அல்லாஹ்வின் மேம்பட்ட அடியார்களாக்கட்டும். நமது தொழு கைப் பங்களிப்பு, மேன்மையான எண்ணங்கள் அனைத்தையும் அல்லாஹ் ஏற்பானாக.

ஆமீன்.

யாரப்பில் ஆலமீன்.

# ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்க விழா




ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் உலக தண்ணீர் தினத்தையும் மதரஸாக்களின் ஆண்டு விழாவையும் கொண்டாடியது.

சுல்தான் பள்ளிவாசல் இணை மண்டபத்தில், 7-5-2017 மதியம் 2 மணி முதல் மாலை 7 மணி வரை, இந்நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. புதிய நிலா இதழின் ஆசிரியர், மு.ஜஹாங்கீர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், சுற்றுப்புற நீர்வள அமைச்சர், மசகோஸ் ஜுல்கிஃப்லி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

தண்ணீர் சிறப்புக் கண்காட்சி, மாணவ மாணவியர் பட்டிமன்றம், கருத்தரங்கம், ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன, அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. விருந்துபசரிப்புடன் ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் இந்த விழா நிறைவு பெற்றது.

# பரிவுமிக்க சமூகத்தை உருவாக்குவோம்!



ஒற்றுமையைக் கட்டிக்காக்கும் அதே வேளையில், ஒருவருக்கு ஒருவர் உறுதுணையாக இருப்பது சிங்கப்பூரின் நாட்டுப்புற-கம்போங் உணர்வை மேலும் வலுப்படுத்தும். என்று அதிபர் டோனி டான் தெரிவித்துள்ளார்.

பல பொருட்களுடன் பலவித சுவையூட்டிகளையும் சேர்த்து சமைத்தால்தான், பிரியாணி சுவை மிகுந்ததாக இருக்கும். அதேபோல் ஒரு வலுவான நாட்டுக்குப் பரிவுமிக்க சமூகம் மிகவும் அவசியமானது, அதுவே நமது இலக்காகும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஜூசியாட் சாலையிலுள்ள காலித் பள்ளிவாசலில், 15-4-2017 முற்பகலில் நடைபெற்ற, அதிபர் சவால் அறநிதி நன்கொடை பிரியாணி நிகழ்ச்சியில், அதிபர் டோனி டான் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். பிரியாணி சமையலிலும் அவர் பங்கேற்றார்.

அதிபர் சவால் அறநிதிக்கு நன்கொடை திரட்டுவதற்காக இந்த பிரியாணி திட்டம் 17 ஆண்டுகளுக்கு முன் 2000ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் எல்லா பள்ளிவாசல்களும் பங்கேற்று உதவுகின்றன. பிரியாணி விற்பனை மூலம் கிடைக்கும் நன்கொடை நிதி நமது சமூகத்திலுள்ள வசதி குறைந்தவர்களுக்கு உதவி அளிக்கிறது, என்று அதிபர் கூறினார். காலித் பள்ளிவாசலுக்கு அழைக்கப்பட்ட சன்லவ் இல்லம், அயின் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்கும் அவர் பிரியாணி பரிமாறினார்.

காலித் பள்ளிவாசல் தலைவரும், பிரியாணி சமையல் நிபுணருமான, ஹாஜி அலாவுதீன் முகம்மது, இத்திட்டத்திற்கு ஆண்டுதோறும் பிரியாணி தயாரிக்கிறார்.

முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் தகவல், தொடர்பு, அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், இந்தத் திட்டத்திற்கு முஸ்லிம்கள் மட்டுமின்றி இதர சமயத்தினரும் ஆதரவளிப்பது பெரும் உற்சாகத்தைத் தருகிறது என்று தமது உரையில் கூறினார்.

“நாம் அனைவரும் ஒன்று சேர்ந்தால் எத்தகைய முயற்சியிலும் வெற்றி பெறலாம் என்பதை இத்திட்டம் உணர்த்துகிறது. பிரியாணி சவால் போன்ற நிகழ்ச்சியில் பல கலாச்சார ஒற்றுமையைக் கட்டிக் காக்கும் நமது கடப்பாட்டை வெளிப்படுத்துகிறோம். உதவி தேவைப் படும் சிங்கப்பூரர்களுக்கும் உதவும் அதிபர் சவால் நிதிக்கு, முஸ்லிம் அல்லாதவர்களும் மனமுவந்து நன்கொடை வழங்கி ஊக்கமளிக்கிறார்கள். பதினேழாவது ஆண்டைத் தொட்டிருக்கும் இத்திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவோம்”, என்று அமைச்சர் உறுதி தெரிவித்தார்.

சிங்கப்பூர் முஃப்தி, டாக்டர் பத்ரிஸ் பக்ரம், முயிஸ் தலைமை நிர்வாகி, அப்துல் ரசாக் மரைக்கார், முதலானோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

---

# ஷரியா சட்ட கருத்தரங்கு



முதல்முறையாக ஷரியா இஸ்லாமிய சட்டக் கருத்தரங்கு 13-5-2017 அன்று நடைபெற்றது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்பட்ட அதில், 170 பேர் பங்கேற்றனர்.

நாடாளுமன்ற நாயகர், ஹலீமா யாக்கூப் சிறப்புரையாற்றினார். வெளிப்படையான சமூகப் பரிவையும், புரிந்துணர்வையும் ஊக்குவிப்பதே கருத்தரங்கின் நோக்கம் என்று அவர் குறிபிட்டார்.

மலாய்க்காரர்கள், முஸ்லிம்கள் ஆகியோரின் உரிமைகளைக் கவனித்துக் கொள்ளும் அதேவேளையில், அனைத்து சிறுபான்மையினரின் உரிமைகளும் கட்டிக்காக்கப்படுவதை உறுதிப் படுத்தும் சில செயல்முறைகள் உருவாக்குவது அவசியம், அதற்கான அணுகுமுறைகளுக்கு முன்னுரிமை அளிப்பது அவசியம், என்று அவர் கூறினார்.

சிறுபான்மையினரின் உரிமைகளுக்கான அதிபர் மன்றம், முயிஸ் இஸ்லாமிய சமய மன்றம், முஸ்லிம் திருமணப் பதிவகம், ஷரியா நீதிமன்றம், ஆகியவை முன்னுதாரணமாகத் திகழ்வதை ஹலீமா யாக்கூப் சுட்டிக்காட்டினார். ஷரியா சட்ட நடைமுறைகளை சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் அறிந்து செயல்படுவதற்கு ஒரு தளமாகவும், களமாகவும் இந்தக் கருத்தரங்கு அமைந்தது.

# பள்ளிவாசல் பாலர் பள்ளி பாட போதனை முறை மேம்படுத்தப்படும்

பள்ளிவாசல்களில் இயங்கிவரும் பாலர் பள்ளி-மதரஸாக்களின் பாட போதனை முறையை மேம்படுத்த, முயிஸ் மன்றமும் மெண்டாக்கியும் பரிசீலித்து வருகின்றன.

மெண்டாக்கியின் ஏற்பாட்டில் 29-4-2017 அன்று நடைபெற்ற கல்விக் கருத்தரங்கில், ஆரம்பகால பாலர் கல்வி தொடர்பான கலந்துரையாடலில், அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம், இதனைத் தெரிவித்தார்.

பள்ளிவாசல்களில் செயல்பட்டுவரும் பாலர் பள்ளிகளுக்கு நிதியாதரவு, பாடத்திட்ட வரைவு, போன்றவற்றில் சவால்கள் உள்ளன. இத்தகைய பள்ளிகளைக் கண்காணிக்க மெண்டாக்கியில் ஒரு தனிப்பிரிவு அமைக்கப் படவேண்டும் என்று ஒருவர் யோசனை தெரிவ்த்தார்.

சிங்கப்பூரில் தற்போது 71 பள்ளிவாசல்கள் உள்ளன, ஆனால் எல்லா பள்ளிவாசல்களிலும் பாலர் பள்ளிகள் இல்லை. எனினும் இப்போது இயங்கிவரும் பாலர் பள்ளிகளைத் தக்கவைத்துக் கொள்ள விரும் புகிறோம். அவற்றை ஒரு குழந்தைப் பராமரிப்பு நிலையத்துடன் இணைக்கலாமா என்பது பற்றி ஆராயவேண்டும், அதுவே சரியான முறை என்று நான் கருதுகிறேன், எனவே அவற்றை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதை பரிசீலிக்க வேண்டும், என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

மெண்டாக்கியின் தலைவருமான டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், அரசாங்கத்தின்



ஆரம்பகால பாலர் பருவ மேம்பாட்டு வாரியத்தின் தேவைகளுக்கு ஏற்ப, பாலர் பள்ளிகள் நடத்தப்படுகின்றனவா, என்பதை முயிஸ் மன்றமும், மெண்டாக்கியும் கண்காணிக் கும் என்றார். அப்போது தான் அந்த வாரியத்தின் ஸ்பார்க் எனப்படும், சிங்கப்பூர் பாலர் பள்ளி அங்கீகாரக் கட்டமைப்பு முத்திரை, கிடைக்கும் என்று அவர் வலியுறுத்தினார்.

மெண்டாக்கியின் 35ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் ஒரு பகுதியாக, குழந்தைப் பராமரிப்பு நிபுணர்கள், பெற்றோர் கொள்கை வகுப்பாளர்கள், உள்ளிட்ட பல தரப்புகளைச் சேர்ந்த சுமார் 400 பேர் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

# மதரஸா மாணவர்களுக்குப் பரிசளிப்பு

மதரஸா மாணவர்களுக்கு, 2017 ஆண்டு பரிசு-விருது வழங்கும் நிகழ்ச்சி, ஜுன் முதல் நாள் நடைபெற்றது.

தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மற்றும் பல்கலைக் கழகத் தொடக்கக் கல்வி மாணவர்கள் 627 பேருக்கு இவை வழங்கப் பட்டன. ஆறு மதரஸாக்களைச் சேர்ந்த மாணவர்களின் சிறந்த மார்க்கக் கல்வித் திறன் மேம்பாட்டுக்காக இந்தப் பரிசுகள் வினியோகிக்கப்பட்டன.

இவர்களில், 125 மாணவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகளைப் பெற்றனர். அவர்களில் மூன்று மாணவர்களுக்கு நான்கு பரிசுகள் அளிக்கப்பட்டன.

முழுநேர மதரஸாக்களில் பயிலும் மாணவர்களின் மார்க்கக் கல்வித் திறனுக்கு ஆதரவளிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தை, பிரதமர் லீ சியென் லூங் 2015ல் அறிவித்தார். முயிஸ் அதற்கு நிதி ஆதரவு வழங்குகிறது. 2016ல் சமயப் பாடத் தேர்ச்சியில் சாதனைபுரிந்த



மாணவர்களுக்கு, $181,500 வழங்கப்படும். இத்தகைய சலுகைகளினால், மதரஸா மாணவர்கள், எதிர்காலத்தில் சிறந்த திறன்களைப் பெறுவார்கள், என எதிர் பார்க்கலாம்.

# முயிஸ் அழைத்த வெளிநாட்டு அறிஞர்கள்




முயிஸ், புகழ்பெற்ற வெளிநாட்டு அறிஞர்களை, சமய, சமூக, மனிதாபிமான, நலன்கள் குறித்து, உரையாற்றுவதற்காக அவ்வப்போது சிங்கப்பூருக்கு அழைத்துச் சிறப்பிக்கிறது.

## ஷெய்க் அப்துல்லா பின் பய்யாஹ்

ஷெய்க் அப்துல்லா பின் பய்யாஹ் அவர்களில் ஒருவர்.

17 மார்ச் 2017 வெள்ளிக்கிழமை, சிங்கப்பூரில் அவர் நிகழ்த்திய, ஆன்மீக சொற்பொழிவை, 650 பேர் கேட்டுப் பயனடைந்தனர்.

ஷெய்க் அப்துல்லா பின் பய்யாஹ் மாரிட்டானியாவில் 1935ல் பிறந்து, ட்டுனிசியாவில் சட்டக் கல்வி பயின்றார். அவர் பெற்ற பட்டங்களும் பதவிகளும் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஐக்கிய அரபு நாடு, ஜித்தா, சவூதி அரேபியா, ஆகியவற்றின் இஸ்லாமிய அமைப்புகளின் சமய கல்வி மேம்பாட்டுக் பணிகளில், ஷெய்க் அப்துல்லா பின் பய்யாஹ் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

உலக இஸ்லாமியச் சட்ட, பத்வா, நிபுணராகப் போற்றப்படும் அவர், ஐக்கிய நாட்டு நிறுவனத்திலும், யுனெஸ்கோவிலும் கடந்த ஆண்டுகளில் உரையாற்றினார். அவர் எழுதிய மார்க்க, கலாசார நூல்கள் பிரபலமானவை.

## ஷேக் ஹம்ஸா யூசுப்

ஷேக் ஹம்ஸா யூசுபும், முயிஸ் அழைப்பை ஏற்று சிங்கப்பூருக்கு வந்திருந்தார். அவர், அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள ஜைத்தூனா கல்லூரியை ஆரம்பித்து, இப்போது அதன் தலைவராகவும், ஷெய்க் அப்துல்லா பின் பய்யாஹ்வின் மொழிபெயர்ப்பாளராகவும் பொறுப்பேற்றுள்ளார்.

அவர் 1977ஆம் ஆண்டில் இஸ்லாத்தை தழுவி, பத்து ஆண்டுகள் அரபு நாடுகளிலும், ஆப்பிரிக்காவிலும், மார்க்கக் கல்வி பயின்று, பட்டங்களைப் பெற்றார். ஜைத்தூனா நிறுவனத்தைத் தொடங்கிய அவர், பல கல்லூரிகள், மற்றும் பல்கலைக் கழகங்களின் இஸ்லாமியக் கல்வித் திட்டத்திற்கு ஆலோசகராகவும் இருந்து வருகிறார்.

அரபு மொழி நூல்களை மொழிபெயர்த்துள்ள ஷேக் ஹம்ஸா யூசுப், பல சொந்த நூல்களையும் வெளியிட்டுள்ளார். ஃபத்வா சட்ட நெறிகள், சிறுபான்மையினரின் பிக்ஹ் உரிமை, இஸ்லாமிய பாதுகாப்பு முறைகள் ஆகியவை அவற்றில் அடங்கும்.




## நபி மொழி

அன்னையின் காலடியில் சுவனம் உள்ளது.

தாய் தந்தையரைத் திட்டுவது அல்லது குறைகூறுவது மிகப் பெரும் பாவமாகும்.

அல்லாஹ்வின் மகிழ்ச்சி தந்தையின் மகிழ்ச்சியில் உள்ளது.

அல்லாஹ்வின் வெறுப்பு தந்தையின் வெறுப்பில் உள்ளது.

# ஃபத்வா மாநாடு - ஃபத்வா நூல் வெளியீட்டு விழா




முயிஸ், சிங்கப்பூர் ஃபத்வாக்கள் நூல் வரிசையின், முதல் தொகுப்பை வெளியிட்டிருக்கிறது. துணைப் பிரதமர், தர்மன் சண்முகரத்னம், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு அதனை வெளியிட்டார்.

ஃபத்வா குழுவின் தலைவராகப் பொறுப்பு வகிக்கும் முஃப்தி ஃபத்ரிஸ் பக்ரம், இந்தோனேசிய முஸ்லிம் பேராசிரியர், குரைஷ் ஷிஹாப் ஆகியோரும் இந்த மாநாட்டில் உரையாற்றினர்.

முயிஸ் அகாடமியின் துணை இயக்குநர், டாக்டர் முஹம்மது ஹன்னான் ஹஸன், முயிஸ் மன்றத்தின் சமய, கொள்கை மேம்பாட்டு இயக்குநர், டாக்டர் நசீருதீன் நசீர், ஆகியோரும் இடம் பெற்றனர்.

முயிஸ் தலைவர் ஹாஜி முஹம்மது அலமி மூஸா, முயிஸ் தலைமை நிர்வாகி, ஹாஜி அப்துல் ரஸாக் மரைக்கார், ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

துணைப் பிரதமர் விரிவான உரை நிகழ்த்தினார். சிங்கப்பூர் முஸ்லிம்கள் தங்கள் சமய, சமூக அடையாளங்களைப் புரிந்து கொள்ளவும், ஒருங்கிணைந்த பல கலாச்சார சமுதாயத்திற்குப் பங்காற்றவும் ஃபத்வா அமைப்பு உதவுகிறது என்று அவர் கூறினார்.


“பன்முக கலாச்சாரமும், பண்பாடும், நமது சிங்கப்பூர் அடையாளத்தின் மதிப்புமிக்க அங்கம். பல இன, சமய, கலாச்சாரங்களைப் பின்பற்றுபவர்களாக நாம் இருந்தாலும், நாட்டின் ஒட்டுமொத்த அடையாளத்தை பெருமிதத்துடன் பேணி வருகிறோம். “வாழ்வோம், வாழ வைப்போம்” என்பதே நமது இலட்சியமாக இருக்கிறது,” என்று துணைப் பிரதமர் எடுத்துரைத்தார்.

மலாய், ஆங்கில மொழிகளில் பதிப்பிக்கப்பட்டுள்ள நூலின், ஆங்கிலப் படிவத்தை முயிஸ் இணையத் தளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

### டாக்டர் யாக்கூப் இப்ராஹிம்

ஃபத்வா செயற்குழு 1968ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டதிலிருந்து, 577 ஃபத்வாக்களை வெளியிட்டுள்ளது. முயிஸ் ஐம்பதாம் ஆண்டை நெருங்கும் இத்தருணத்தில், நமது ஃபத்வாக்களின் சரித்திரத்தையும், சிங்கப்பூரில் இஸ்லாமிய நெறிமுறையின் மேம்பாட்டையும், எடுத்துரைக்கும் நூல் வெளியிட்டிருக்கிறது சிறப்புக்குரியது என்று முஸ்லிம் விவகாரங் களுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர், டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், தமது உரையில் தெரிவித்தார்.

ஃபத்வாக்களை மனப்பூர்வமாக மேம்படுத்துவது சிங்கப்பூரின் சட்ட நிர்வாகத்திற்குரிய அங்கீகாரமாக அமையும் என்று அவர் விளக்கினார். பொதுமக்களின் நலன்களைப் பாதுகாக்க, புதிய சூழ்நிலைக்கு இசைவான விதிமுறைகளை, ஃபத்வா செயற்குழு மறுபரிசீலனை செய்யலாம் என்றும் பரிந்துரைத்தார்.



# இஸ்லாம் மார்க்க ஆசிரியர் அங்கீகாரத் திட்டம்

சிங்கப்பூர் இஸ்லாமிய சமய (முயிஸ்) மன்றமும், சிங்கப்பூர் இஸ்லாமிய அறிஞர்கள்-சமய ஆசிரியர்கள் (PERGAS) சங்கமும், அஸாடிஸா இஸ்லாம் மார்க்க ஆசிரியர் அங்கீகாரத் (ARS) திட்டத்தை, 2005 ஆண்டு முதல் செயல்படுத்தி வருவதை அறிவோம். முயிஸ் மன்றமும், பெர்காஸ் அமைப்பும் இடம்பெற்றுள்ள அஸாடிஸா அங்கீகாரச் செயலகமும் (ARB) இயங்கி வருகிறது.

மதரஸாக்கள், பள்ளிவாசல்கள், இஸ்லாமியக் கல்வி நிலையங்கள், முஸ்லிம் அமைப்புகள், மற்றும் வசிப்பிடங்களின் தேவைக்கு செயலகம் உதவி வழங்கி வருகிறது.

சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்துக்குச் சிறந்த சமய வழிகாட்டும் ஒருங்கிணைப்புப் பணியையும், பங்கையும், அஸாடிஸா ஆற்றிவருகிறது. பல இன, பல சமய, நவீன சிங்கப்பூர் வாழ்க்கை நெறிமுறைகளை, மேம்படுத்த அவை பெரிதும் உதவுகின்றன.

இஸ்லாம் மார்க்க ஆசிரியர் அங்கீகாரத் திட்டம் (ARS), 2017 ஜனவரி முதல் நாளிலிருந்து, புதிய உதவித் திட்ட விதிமுறைகளை, முஸ்லிம் சட்ட நிர்வாகத்தின்படி செயல்படுத்தி வருகிறது. இஸ்லாமியக் கல்வி பயிற்சி உதவி தேவைப்படுபவர்கள், மார்க்க ஆசிரியர் அங்கீகாரத் திட்டத்தின் (ARS) கீழ், முயிஸில் பதிவு செய்து கொள்ளலாம்.

நவீன, பல சமய, பல இன சிங்கப்பூர் சமுதாயத்தில், இஸ்லாமிய நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்குரிய பயிற்சியையும், நிபுணத்துவத் திறன்களையும், இந்தத் திட்டங்கள் வழங்கும் என்று முயிஸ் தெரிவித்துள்ளது.








# பள்ளிவாசல்களுக்குத் தொண்டூழியர்கள்

பள்ளிவாசல் நிர்வாகக் கழகத்தில் தொண்டூழியர்களாகப் பணிபுரிய விரும்புவோரை முயிஸ் வரவேற்கிறது. அவர்கள் 2017 நவம்பர் முதல் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பணியாற்றலாம்.

அதற்கான விண்ணப்ப படிவத்தை முயிஸ் பயனீட்டாளர் சேவைப் பிரிவில், அல்லது www.muis.gov.sg இணையத்தளத்தில், பெற்றுக் கொள்ளலாம். பள்ளிவாசல்களிலும் விண்ணப்ப படிவங்கள் கிடைக்கும்.

அவை, அல்-அமீன் பள்ளிவாசல், அப்துல் கபூர் பள்ளிவாசல், அல் அப்ரார், அல் ஃபலாக், பென்கூலன் ஜாமியா சூலியா, ஜமெக் குயின்ஸ்டவுன் பள்ளி, ஜாமியா அர் ராபிதா, கம்போங் டெல்டா, மவுலானா முஹம்மது அலி, உமர் கம்போங் மலாக்கா, பால்மர் ஹாஜி முஹம்மது சாலே, பள்ளிகளாகும்.

விண்ணப்பதாரர்கள், பூர்த்தி செய்யப் பட்ட படிவத்துடன், தங்கள் புகைப்படத்தையும் இணைத்து அனுப்ப வேண்டும். முகவரி பள்ளிவாசல் திட்ட அலுவலகம், முயிஸ், 273 பிராடல் சாலை, சிங்கப்பூர் 579702.

மேல் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளுங்கள், தொலைபேசி: 62712355, மின்னஞ்சல்: Ariff_Salleh@muis.gov.sg அல்லது, Amalia_ABD_HAMID@muis.gov.sg.

# முன்னாள் அமைச்சர் உதுமான் வோக் மறைவு

சிங்கப்பூர் அமைச்சராகவும், பத்திரிகையாளராக வும், பெயர் பதித்த உதுமான் வோக், 92 வயதில், 17-4-2017 அன்று பொது மருத்துவமனையில் காலமானார்.

சிங்கப்பூரில் 1924ல் பிறந்த அவர், 1954ஆம் ஆண்டில் மக்கள் செயல் கட்சியில் சேர்ந்தார். 1963 முதல் 1981 வரை பாசிர் பாஞ் சாங் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். திரு. லீ குவான் இயூ அவர்களின் அமைச்சரவையில் முக்கிய உறுப்பினராக விளங்கிய உதுமான் வோக், அவருடைய நெருங்கிய நண்பராகவும் இருந்தார் உள்துறை சமூக நல கலாசார அமைச்சராக அவர் பதவி வகித்தார்.

உத்துசான் மலாயு, பெட்டிர் ஆகிய பத்திரிகைகளில் உதுமான் வோக் பணியாற்றி னார்.

நார்த் பிரிட்ஜ் சாலை சுல்தான்



பள்ளிவாசலில், நண்பகலில் நடத்தப்பட்ட தொழுகைக்குப் பிறகு, அவருடைய உடல் சுவா சூ காங்கில், 19-4-2017 அன்று, அடக்கம் செய்யப்பட்டது.

சிங்கப்பூரை உருவாக்கியவர்களில் ஒருவரான உதுமான் வோக்கின் மறைவு, நாட்டு க்குப் பேரிழப்பு என்று பிரதமர் அலுவலக அறிக்கை இரங்கல் தெரிவித்தது.

# மானுடம் போற்றும் மாணவர்கள்

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), தமிழ்மொழி விழாவின் ஓர் அங்கமாக, 16-4-2017 அன்று, உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய உள்ளரங்கில், "மானுடம் போற்றும் மாணவர்கள்" என்ற இலக்கியச் சொற்பொழிவு நிகழ்ச்சியை நடத்தியது.

சிங்கப்பூரில் தமிழ்மொழியை அடுத்த தலைமுறைக்கும், இளையர்களுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்பது இந்நிகழ்ச்சியின் இலக்கு. திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் துணைமுதல்வராகவும், தமிழ்த்துறைத் தலைவ ராகவும் பணியாற்றி, தமிழ்மொழி மற்றும் தமிழ் இலக்கியங்களை கல்லூரி மாணவர்களுக்கு 41 ஆண்டுகள் போதித்த பேராசிரியர், முனைவர் ஜனாப் பீ.மு. மன்சூர் சிறப்புரையாற்றினார். வளர்தமிழ் இயக்கத்தின் தலைவர் திரு. ராஜாராம் இந்நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியின் முக்கிய அங்கமாக "தாய்மொழியான தமிழே!" என்ற காணொளி யும், "மொழி எதற்கு? தமிழ் எதற்கு?" என்ற சிறப்பு உரையாடல் அங்கமும் இடம்பெற்றது. சிங்கப்பூரில் தமிழ்மொழி வளர்ச்சிக்கும், சமூக நலப் பணிகளுக்கும், பங்களிப்பு செய்பவர்களு க்கு ஆண்டுதோறும் தமிழ்மொழி விழாவில் உயரிய "ஜமாலியன் விருது" வழங்கி வருகிறது ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம். இந்த ஆண்டு "ஜமாலியன் விருது",MODERN MONTESSORI INTERNATIONAL PTE LTD குழுமத்தின் தலைவரும், தமிழ்மொழி கற்றல்



வளர்ச்சிக் குழுவின் துணைத் தலைவராகவும் பணியாற்றி வருகின்ற முனைவர் டி. சந்துரு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட, சிங்கப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முரளி பிள்ளை, ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), சிண்டாவுடன் இணைந்து மாணவர் களுக்கான இலவசப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தியதையும், அச்சங்கத்தின் பல்வேறு கல்விச் சார்ந்த சமூக நலப் பணிகளையும் பாராட் டினார்.

தலைமையுரையாற்றிய சங்கத்தின் தலைவர் முனைவர் மு. அ. காதர், "தமிழ் நமது மொழி. அதை விழி போல் காப்போம்! சிங்கப்பூர் நமது நாடு. அதை விழிப்புணர்வோடு காப்போம்!" என்றும், சிங்கப்பூரில் நாம் அனைவரும் ஒன்றுபட்ட சமுதாயமாகத் திகழ்வதோடு, சமய இன நல்லிணக்கத்தோடு தொடர்ந்து நமது ஒற்றுமையை மேம்படுத்த வேண்டும்" என்றும் வலியுறுத்தினார்.

# சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் பவள விழா




சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் 75ஆம் ஆண்டு நிறைவாக, பவள விழாவைக் கொண்டாடியது. 1941 ஜுன் 3ஆம் தேதி தொடங்கப்பட்ட அமைப்பான இது, தொய்வின்றி ஆற்றிவரும் நற்பணிகளை நாடறியும்.

கடையநல்லூர் முஸ்லிம் லீக், 8-8-1941 அன்று முறையாகப் பதிவு செய்யப்பட்டது. அதற்கான பணியை ஆற்றிய முன்னோடி, அல்மர்ஹூம் இமாம், காதி, ஹாஃபிஸ் எஸ்.ஏ.முஹம்மது அவர்கள். கடையநல்லூர் முஸ்லிம் லீக், 75ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடும் தருணத்தில், இந்தப் பெரியாரை யும், சங்கத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட மற்றவர்களையும், நினைவுகூர சமூகம் கடமைப்பட்டிருப்பதாக சங்க நிர்வாகிகள் மனநிறைவுடன் கூறினர்.

“நமது சமூகம் அளவில் சிறியதாக இருக்கலாம். ஆனால் வரலாற்றில் தடம் பதித்த ஒரு சமூகம். தேசிய நிர்மாணத்திலும், சமூகப் பிணைப்பிலும், கல்வித் துறையிலும், இஸ்லாமி யப் பண்பாடுகளைப் பரப்புவதிலும், நாம் முத்திரை பதித்துள்ளோம்!” என்று சங்க நிர்வாகிகள் பெருமிதம் தெரிவித்துள்ளனர்.

அதற்குரிய ஓர் அங்கீகாரமாக, சிங்கப்பூரின் மத்திய பகுதியில் அமைந்துள்ள கடையநல்லூர் தெருவைக் கருதலாம். முஸ்லிம்களின் பெயர் சொல்லும் உயிரோட்டம் மிக்க வீதியாக இது விளங்குகிறது.

சிங்கப்பூரில் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட பெருமகன் அ.நா.மெய்தீனை மூத்த தலைமுறையினர் அறிவார்கள். கடையநல்லூரில் 1913ல் பிறந்து, ஏழு வயதில் சிங்கப்பூருக்கு வந்த அவர், உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியைத் தோற்றுவிப்பதில் வெற்றிபெற்ற வரலாறு விரிவானது. கல்வி, குடியுரிமை, வாக்களிப்பு, போன்ற சமுதாயக் கடப்பாடுகளுக்காக அ.நா.மெய்தீன் உழைத்தார். 1991ல் மறைந்த அவருடைய ‘நெஞ்சில் பதிந்த நினைவுச் சுவடுகள்’ நூல், சாதனைச் சரித்திரம்.

உமறென்னும் பெரும்புலவர் பெயரால் இங்கே உயர்கல்விக் கூடத்தை எழுப்பலானார். தமிழ்ப்புலவர் ஒருவருக்கு அவர் தாய்நாடு தராத உயர் பரிசுதனை இங்கே தந்தார். தமிழ்க்கல்வி எனும் விளக்கு எரிவதற்குத் தம்முடலைத் திரியாக மாற்றிக் கொண்டு, இமைப்பொழுதும் சோராத உழைப்பு என்னும் எண்ணெய் வார்த்த அரும்மனிதர். அ.நா.மெய்தீன்.

அ.நா.மெய்தீன், க.து.மு.இக்பால், ப.சா.ஷம்சுதீன், உ.செ.உஸ்மான், மு.அ.மசூது ஆகியோர், அறுபதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளதை அறிவோம். சிங்கப்பூர் வானொலி, தொலைக்காட்சிக் கழகங்களில் தொடர்புடைய உ.ஹ.அப்துல் மஜீது, சதக்கத்துல்லா, ஹைதர் அலி, முஹம்மது ரஃபி, நபிஸா, முஹம்மது காசிம் முதலானோர் அறிவோம்.

“நாம் யார், நாம் என்ன செய்தோம், கட்டுக்கோப்பான ஒரு சமுதாயத்தை எப்படி உருவாக்கினோம், என்பதை இளைய தலைமுறை யினரும் அறிந்து கொள்ள வேண்டும். அதற்கான ஆதாரங்களைத் திரட்டி வரலாற்றின் அடிச்சுவடுகளைப் பதிவு செய்துள்ளோம். 75ஆம் ஆண்டு நிறைவு விழாவில் அரிய காட்சி களைக் காணும் நல்வாய்ப்பு அனைவருக்கும் வழங்கப்பட்டது,” என்கிறார் கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவர் ஹாஜி நசீர் கனி.

தொடக்கத்தில் 300 உறுப்பினர்களைக் கொண்டிருந்த இச்சங்கம், இன்று 1,500 உறுப்பினர்களைக் கொண்டு 20,000 மக்களைப் பிரதிநிதிக்கும் அமைப்பாக விரிவடைந்து இருக்கிறது.

# இனிய இஃப்தார் நிகழ்ச்சிகள்

நமது சமூக அமைப்புகளும், பள்ளிவாசல்களும் ரமலான் நோன்பு நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்தின. முதல் பாதியில் நடைபெற்ற சஹர் மற்றும் இஃப்தார்கள் இவை.

மினி என்வைரன்மெண்ட் சர்வீஸ் நிறுவனம் (எம்இஎஸ்.) 27-5-2017 அதிகாலையில், முதலாவது சஹர் நோன்பு நோற்கும் நிகழ்ச்சியை, வெளிநாட்டு ஊழியர் தங்கும் விடுதியில் நடத்தியது. இந்நிகழ்ச்சியில் உள்துறை, சுகாதார அமைச்சுகளின்



நாடாளுமன்றச் செயலாளர் அம்ரின் அமீன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

எம்இஎஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி எஸ்.எம்.அப்துல் ஜலீல் ஆண்டு தோறும் இரண்டாயிரம் ஊழியர்களுக்குத் தமது நிறுவனம் வழங்கிவரும் நோன்பு நோற்பு-துறப்பு வசதிகளை எடுத்துரைத்தார்.





முன்னாள் மூத்த நாடாளுமன்றச் செயலாளர் ஹவாஸி டைப்பி, குவைத்துக்கான சிங்கப்பூர் தூதர், ஜைனுல் ஆபிதீன் ரஷீத், ஆகியோர் இந்த சஹர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### பென்கூலன் பள்ளிவாசலில்

பென்கூலன் பள்ளிவாசலில் 1-6-2017யில் நடைபெற்ற இஃப்தார் நிகழ்ச்சியில், பிரதமர் அலுவலக அமைச்சரும், மனிதவள, வெளியுறவு, இரண்டாம் அமைச்சருமான ஜோசஃபின் டியோ, கலந்துகொண்டு பேசினார்.



“சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் நிகழ்ச்சி இது. பல இன, பல சமய சிங்கப்பூரர்கள், தங்கள் சொந்த சமயக் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பது அவசியம். சிங்கப்பூர் இதனைப் பின்பற்றி வருகிறது. அதனால் பல இனத்தவரும், சமயத்தினரும் பரஸ்பர மரியாதையுடன், அமைதி, நல்லிணக்கத்துடன் வாழ முடிகிறது. நோன்பு துறக்கும் நிகழ்ச்சி இதற்கு உதாரணம். முஸ்லிம் நண்பர்களுடன், பிற சமயங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்வதன் மூலம், ஒருவருக்கொருவர் புரிந்துணர்வை வலுப்படுத்திக் கொள்ள முடிகிறது,” என்றார் அவர்.

“நோன்பு துறப்பு நிகழ்ச்சிக்கு முஸ்லிம்கள் தம்மை அழைத்திருப்பது பெருந்தன்மையையும், அரவணைப்பையும் பிரதிபலிக்கிறது. நமது முன்னோர்கள் சமய

ஒற்றுமையை நிலைநாட்ட அரும்பாடுபட்டனர். அந்தச் சிறப்பை எதிர்கால சமூகத்தினரும் கட்டிக்காப்பது அவசியம்!" என்று அமைச்சர் கூறினார்.

பள்ளிவாசலின் தலைவர் எஸ்.எம். அப்துல் ஜலீல், தங்கள் அழைப்பை ஏற்று, இஃப்தார் நிகழ்ச்சிக்கு வருகையளித்துச் சிறப்பித்த அமைச்சருக்கு, நன்றி பாராட்டினார்.

### புளுஸ்டார்

புளுஸ்டார் வெளிநாட்டு ஊழியர் தங்கும் விடுதியில், 4-6-2017 அன்று இடம் பெற்ற இஃப்தார் நிகழ்ச்சியில், பிரதமர் அலுவலக அமைச்சர், டெஸ்மண்ட் லீ பங்கேற்று உரையாற்றினார். 750 ஊழியர்கள் இந்த இஃப்தாரில் கலந்து கொண்டனர்.

### கேலாங் சிராய்

ரமலான் மாத உதவியாக, 575 ஏழைக் குடும்பத்தினருக்கு 209,000 வெள்ளிக்கு மேற்பட்ட தொகையும் பற்றுச்சீட்டுகளும் வழங்கப்பட்டன. இஸ்லாத்தைத் தழுவிய குடும்பங்களுக்கு உதவித் தொகை வினியோகிக் கப்பட்டது. எம்இஎஸ் குழுமத் தலைவர் ஜலீல் ஆதரவில், கேலாங் சிராயில் நடைபெற்ற நிகழ்ச்சியில், டாக்டர் ஹலீமா யாக்கூப் அவற்றை வழங்கினார்.

### அல் முத்தக்கீன் பள்ளிவாசலில்

அங் மோ கியோவிலுள்ள அல் முத்தக்கீன் பள்ளிவாசலில், 6-6-2017 மாலையில் நடைபெற்ற இஃப்தாரில், பிரதமர், லீ சியன் லூங், கலந்து கொண்டார். முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் தகவல், தொடர்பு, அமைச்சர், டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

அல் முத்தக்கீன் பள்ளிவாசல் மூன்றரை மில்லியன் வெள்ளி செலவில் புதுப்பிக்கப் பட்டுள்ளது. அங் மோ கியோ குழுத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள், முயிஸ் பிரதிநிகள் உள்ளிட்ட 400 பேர் இந்த





இஃப்தாரில் கலந்து கொண்டனர்.

### ஜமால் முஹம்மது கல்லூரி

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), சென்ற சனிக்கிழமை 10-06-2017 அன்று, பென்கூலன் பள்ளிவாசலில், நோன்பு துறப்பு, மற்றும் சமய இன நல்லிணக்க நிகழ்ச்சியை நடத்தியது.

உள்துறை அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சுக்கான நாடாளுமன்றச் செயலாளர், அம்ரின் அமின், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

ஸ்ரீ நாராயண மிஷன் இல்லத்தில் வசிக்கும் முதியவர்களுக்கு, சக்கர நாற்காலிகளை நன்கொடையாக, ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் அந்நிகழ்ச்சியில் வழங்கியது.

சங்கத்தின் தலைவர் முனைவர் மு.அ.காதர், "கவிக்கோ அப்துல் ரகுமானின் மறைவு, ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு," என்று தனது வரவேற்புரையில் நினைவு கூர்ந்தார். புக்கிட் பாத்தோ தனித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர், திரு.முரளி பிள்ளை, நாடாளு மன்ற முன்னாள் நியமன உறுப்பினர், திரு. இரா தினகரன், மற்றும் பல சமூக அமைப்புகளின் தலைவர்களும், பல இன சமூகத்தைச் சேர்ந்த பொதுமக்களும் இந்நிகழ்ச் சியில் கலந்துகொண்டனர்.

### சூலியா பள்ளிவாசலில்

மஸ்ஜித் ஜாமியா சூலியாவும், சிங்கப்பூர் நாகூர் சங்கமும், இணைந்து 11-6-2017 மாலையில், சூலியா பள்ளிவாசலில், இஃப்தார் நிகழ்ச்சியை நடத்தின. பல இன சமூகத்தினரும் கலந்து கொண்டனர்.

துணைப் பிரதமரும், தேசியப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு அமைச்சருமான, திரு. டியோ ச்சீ ஹியன், சிறப்பு விருந்தினராக வருகையளித்து உரையாற்றினார்.

நாகூர் சங்கத்தின் தலைவர் முஹம்மது கவுஸூம், சூலியா பள்ளிவாசல் நிர்வாகிகளும் வருகையளித்த அனைவருக்கும் நன்றி பாராட்டினர்.

# யூசுப் இஷாக் பள்ளிவாசல் திறப்பு விழா



நமது முன்னாள் அதிபர் யூசுப் இஷாக் பள்ளிவாசல் உட்லண்ட்ஸ் வட்டாரத்தில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

பிரதமர் லீ சியன் லூங், அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம், நாடாளுமன்றத் தலைவர்கள், அடித்தளத் தலைவர்கள், புரவலர்கள், முதலான 100 விருந்தினர் வருகையளித்திருந்தனர்.

யூசுப் இஷாக் அவர்களின் துணைவியார், 84 வயது புவான் நூர் ஆயிஷா, பள்ளிவாசலைத் திறந்து வைத்தார். மகள் கமாரியா 68, மகன் டாக்டர் இம்ரான் யூசுப் 67, டத்தின் ஜுரியானா யூசுப் 64, ஆகியோரும், மற்ற குடும்ப உறுப்பினர்களும் திறப்பு விழாவில் பங்கேற்றனர்.

யூசுப் இஷாக் 1965ல் அரச நாயகராக (யாங் டி பெர்த்துவான் அகோங்) பதவியேற்று, பிறகு சிங்கப்பூரின் அதிபராக 1970 வரை பதவி வகித்தார்.

யூசுப் இஷாக் பள்ளிவாசல், 18 மில்லியன் வெள்ளி செலவில் கட்டப்பட்டுள்ளது. 4,500 பேர் ஒரே நேரத்தில் தொழுகையை நிறைவேற்றக்கூடிய இடவசதியை இது பெற்றிருக்கிறது. மெண்டாக்கி நிதியுதவித்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 26வது பள்ளிவாசலான இதில், குடும்பங்கள் ஒன்று சேர்ந்து தொழக்கூடிய இடவசதி உள்ளது.

யூசுப் இஷாக், பல இன, பல சமய, மக்கள் நல்லிணக்கத்துடன் வாழ்வதை விரும்பியவர். அவருடைய இந்த நற்பண்பைப் பறைசாற்றுவதாக புதிய பள்ளிவாசல் அமைந்துள்ளது என்று இதன் தலைவர் அய்யூப் ஜொஹாரி தெரிவித்தார்.

பலபயன் மண்டபம், மாநாட்டு அறை, கருத்தரங்க அறை, முதலான இட வசதிகள் இதில் உள்ளன.

பிரதமர் லீ சியன் லூங் 2014 தேசிய தின உரையில், உட்லண்ட்ஸ் பகுதியில் இரண்டு ஆண்டுகளில் பள்ளிவாசல் கட்டி முடிக்கப்பட்டு, யூசுப் இஷாக் பெயர் சூட்டப்படும் என்று அறிவித்தார். அதன்படி புதிய பள்ளிவாசல் திறப்புவிழா கண்டுள்ளது.

இந்தப் பள்ளிவாசல் முஸ்லிம் சமூகத்தையும், சிங்கப்பூர் குடும்பங்களையும் இணைக்கும் மையம் என்று முஸ்லிம் விவகார அமைச்சர், டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், தமது உரையில் குறிப்பிட்டார். பல கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் ஒருங்கிணைக்கும் முக்கிய கடப்பாட்டை இதன் மூலம் நாம் வெளிப்படுத்துகிறோம், என்றும் அவர் கூறினார்.

முஃப்தி முஹம்மது பத்ரிஸ் பக்ரம் நடத்திய தொழுகையைத் தொடர்ந்து, பள்ளிவாசல் திறப்புவிழா சிறப்பாக நடைபெற்றது. 5,000 பேர் திரண்டு வந்து தொழுகையை நிறைவேற்றினர்.



